# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்

**முன்னிலை – திரு.எஸ்.பி.பரத் குமார், M.B.A.,L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

**2026 ம் வருடம், மார்ச் மாதம், 10 ம் நாள், செவ்வாய் கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண். 250/2026**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 352/2024**

சிவக்குமார் (எ) கிஷா பாய் (25/26)

த/பெ. சண்முக சுந்தரம்

மனுதாரர் / எதிரி

/ எதிர் /

தமிழக அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

தாந்தோணிமலை காவல் நிலையம்,

(குற்ற எண். 241/2024) எதிர்மனுதாரர் / புகார்தாரர்

இம்மனுவானது 10.03.2026 இன்று என் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் / எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் என்.வினோத் குமார்,எம்.காம்.,எம்.பில்.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும் இருதரப்பையும் கேட்டறிந்து இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

1. எதிரி மீது தாந்தோணிமலை காவல் நிலைய கு.எண்.241/2024, இதச 379 பிரிவின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் வாய்தாவிற்கு வருகையின்மையின் காரணமாக எதிரிக்கு பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில்

இருந்து வருகிறார். எதிரி பிணை கோரி கு.வி.மு.ச. பிரிவு 437ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் / எதிரி தரப்பில் தாக்கல் செய்த பிணை மனுவில் மனுதாரர் / எதிரி வழக்கின் விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் அன்று அவர் ஆஜராகாததால் பிடி வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு உத்தரவானது. கடந்த 24.11.2025ம் தேதி பிடி வாரண்டிற்காக கைது செய்யப்பட்டு இன்று வரை நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், இதச 379 பிரிவு என்பது பிணையில் விடமுடியாத குற்றம் என்பதாலும், மனுதாரர் / எதிரியானவர் உடல் நிலை சரியில்லாமல் இருந்ததாகவும், அதனால் வாய்தாவிற்கு வர இயலவில்லை எனவும், அந்த விவரத்தை வழக்கறிஞரிடமும் சொல்ல இயலவில்லை எனவும், மனுதாரர் / எதிரி உரிய பிணையதாரர்களை முன்னிருத்துவதாகவும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாகவும், மனுதாரர் / எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. அரசு மற்றும் காவல்துறை தரப்புக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் அறிவிப்பு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

4. மனுதாரர் / எதிரி தாக்கல் செய்துள்ள பிணை மனு, எதிர்மனுதாரர் செய்துள்ள ஆட்சேபணை, மற்றும் வழக்காவணங்கள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரர் / எதிரி பிடி வாரண்ட் மூலம் 24.11.2025 அன்று கைது செய்யப்பட்டு 107 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதாக தெரிய வருகிறது. ஆகவே மேலும் மனுதாரர் / எதிரியை நீதிமன்ற காவலில் வைக்க வேண்டிய அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுவதால் நீதியின் நலனை கருத்தில் கொண்டு, பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் மனுதாரர் / எதிரிக்கு பிணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. மனுதாரர் / எதிரி தலா இரண்டு ஜாமீன்தாரர்களும் ரூ.10,000/-க்கு பிணைப்பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும். மேலும், ஜாமீன்தாரர் அடையாள சான்று கொடுக்க வேண்டும். ஜாமீன்தாரரின் புகைப்படம், கட்டைவிரல் ரேகை மற்றும் செல்போன் எண் ஆகியவை பிணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

2. மனுதாரர் / எதிரி பிணையில் சென்ற தினத்திலிருந்து இந்நீதிமன்றத்தில் தினமும் காலை 10.30 மணிக்கு மறு உத்தரவு வரும் வரை கையெழுத்திட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

3. நீதிமன்ற விசாரணையின்போது மனுதாரர் / எதிரி தவறாமல் ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 229-A ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்படும்.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**